# தேர்தல் ஆணையம் ஏற்படுத்தும் குழப்பம்!

## அனைத்துக் கட்சி கூட்டத் தீர்மானம்... முதல் பக்கத் தொடர்ச்சி

வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணி என்பது நியாயமான மற்றும் நேர்மையான தேர்தலுக்கு மிக முக்கியம்; நாடாளுமன்ற ஜனநாயகத்தின் உயிர்மூச்சாகக் கருதப்படுகிறது. அரசியல் சட்டமும் மக்கள் பிரதிநித்துவச் சட்டமும் தேர்தல் ஆணையத்திற்கு இதற்காகவே அதிகாரத்தை வழங்கி இருக்கிறது.

**மக்களின் வாக்குரிமைக்கு எதிரான செயலாகும்!**

நடுநிலைமையுடன், பாரபட்சமின்றி எந்த அரசியல் கட்சிக்கும் துணை போகாமல் சுதந்திரமான அமைப்பாகத் தேர்தல் ஆணையம் செயல்பட வேண்டும். தேர்தலில் அனைத்துக் கட்சிகளுக்கும் சம களத்தை (Level Playing Field) ஏற்படுத்திக் கொடுக்கும் மிக முக்கியமான கடமையைத் தேர்தல் ஆணையத்திடம் அரசியல் சட்டம் ஒப்படைத்துள்ளது.

ஆனால் பொறுப்புள்ள கடமையை நிறைவேற்ற வேண்டிய தேர்தல் ஆணையமே ஒன்றியத்தில் ஆட்சியிலிருக்கும் ஒரு கட்சியின் சார்பாக நின்று செயல்படுவதாகக் குற்றம் சாட்டுகிறோம்.

உச்சநீதிமன்றத்தில் உள்ள S.I.R. வழக்கில் இறுதித் தீர்ப்பு வராத நிலையில், தனது 27102025 அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் நடத்துவதாக அறிவித்துள்ள சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) முழுக்க முழுக்க ஜனநாயக விரோதமான, தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமைக்கு எதிரான செயலாகும்.

**S.I.R சீராய்வை கைவிடுக!**

எனவே இந்த S.I.R. ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. ஆகவே இந்த S.I.R சீராய்வை தேர்தல் ஆணையம் இப்போது கைவிடும்படி அனைத்துக் கட்சிகளின் இக்கூட்டம் தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் வைக்கிறது.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பில் உள்ள குறைகள் களையப்பட்டு, உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலை வெளிப்படையாகக் கடைப்பிடித்து, உரிய அவகாசம் தந்து, 2026 தேர்தலுக்குப் பின்பு, எக்கட்சிக்கும் சார்பற்ற நிலையில் தேர்தல் ஆணையம் S.I.Rஐ நடத்த வேண்டும்.

தேர்தல் ஆணையம் இந்தக் கருத்துகளை ஏற்காததால், தமிழ்நாட்டு வாக்காளர்கள் அனைவரின் வாக்குரிமையையும் நிலைநாட்ட உச்சநீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. தேர்தல் ஜனநாயகத்தைக் காப்பாற்றிட தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வது எனவும் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



திருச்சியில் விரைவில் திறப்பு விழா காண உள்ள ரூ.290 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திலான மாபெரும் காமராசர் நூலகம் மற்றும் அறிவுசார் மைய கட்டிடப் பணிகளை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு செய்தார். இந்த நிகழ்வில் கட்டிட பொறியாளர்கள், அரசு உயர் அதிகாரிகள், வல்லுனர்கள் உடன் இருந்தனர்.

### பூவிருந்தவல்லி அருகே கோவில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த

# 2 குழந்தைகளின் பெற்றோருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, நவ.4-**

**திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், அயனம்பாக்கம் கிராமம், மகாத்மா காந்தி நகரில் உள்ள பொன்னியம்மன் கோயில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த இரண்டு குழந்தைகளின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

அது வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், அயனம்பாக்கம் கிராமம், மகாத்மா காந்தி நகர், பொன்னியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் தமீம் அன்சாரி (எ) தமிழரசு மற்றும் அவரது மனைவி திருமதி. வசந்தா ஆகிய இருவரும் (01.11.2025) அன்று நண்பகல் 12.00 மணியளவில் பணி நிமித்தம் காரணமாக தங்களது இரண்டு குழந்தைகள் செல்வன். ரியாஸ் (வயது 5) மற்றும் செல்வன்.ரிஸ்வான் (வயது 3) ஆகிய இருவரையும் வீட்டில் விட்டு வெளியில் சென்ற நிலையில் மேற்படி குழந்தைகள் இருவரும் அருகிலுள்ள பொன்னியம்மன் கோயில் குளத்தில் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### கொல்லிமலை சித்த மருத்துவமனை

# சித்த மருத்துவக் கல்லூரியாக 2 ஆண்டுகளில் தரம் உயர்த்தப்படும்!

## மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

**கொல்லிமலை, நவ.4-**

**கொல்லிமலை சித்த மருத்துவமனை சித்த மருத்துவக் கல்லூரியாக 2 ஆண்டுகளில் தரம் உயர்த்தப்படும் என புதிய சித்த மருத்துவமனையை திறந்து வைத்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்தார்.**



நாமக்கல் மாவட்டம், நாமக்கல் மாநகராட்சி, பழைய அரசு மருத்துவமனையில் நேற்று முன்தினம் (02.11.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி துர்காமூர்த்தி, ஆகியோர் தலைமையில், மாநிலங்களவை உறுப்பினர்/நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மக்களவை உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மேயர் து.கலாநிதி, இந்திய மருத்துவம் (ம) ஹோமியோபதி துறை ஆணையாளர் திருமதி.மு.விஜயலட்சுமி ஆகியோர் முன்னிலையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.3.34 கோடி மதிப்பீட்டில் 50 ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனை உட்பட 3 புதிய பொது சுகாதார அலகுகள் மற்றும் 2 புதிய துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

நாமக்கல் மாவட்டத்தின் மருத்துவ வளர்ச்சியில் ஒரு புதிய மைல் கல் என்ற வகையில், பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரூ.1.00 கோடி மதிப்பில் 50 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவமனையில் சித்த மருத்துவம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மூலமாக பொது மக்களுக்கு சிகிச்சை வழங்கப்பட உள்ளது. இம்மருத்துவமனையில் சித்த மருத்துவத்தின் சிறப்பு சிகிச்சை முறைகளான தொக்கணம், ஒற்றடம், நீராவி குளியல், புறவளையம், சிறதாரை, வர்மம், அட்டை விடல், சுட்டிகை, வேது பிடித்தல், நசியம் போன்ற சிகிச்சைகள் மருத்துவ பயனாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

இவ்வளாகத்தில் ஏற்கனவே செல்பட்டுக் கொண்டிருக்கும் 16 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவ பிரிவும் சேர்த்து 66 படுக்கைகள் கொண்ட உள் நோயாளிகள் மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட உள்ளது. புதிய பணியிடங்களும் உருவாக்கப்பட்டு, நாமக்கல் மாவட்ட மக்களுக்கு பயன்தரும் பெரிய அளவில் வகையில் இம்மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் 19 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ரூ.1,018 கோடி மதிப்பில் அமைக்கப்படும் என்று அறிவித்த நிலையில், நாமக்கல் மாவட்டத்தில் மருத்துவ கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் 2 அரசு தலைமை மருத்துவமனைகள் வேண்டும் என்ற கோரிக்கையினை மாநிலங்களவை உறுப்பினர் அவர்கள் வைத்தார்.

அதனடிப்படையில் ரூ.53.39 கோடி மதிப்பில் இராசிபுரம் அரசு மருத்துவமனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு தன்னிறைவு பெற்ற மருத்துவமனையாக பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், ரூ.23 கோடி மதிப்பில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு கட்டிடப்பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. விரைவில் பணியாளர்கள் நியமனம் முடிவுற்றவுடன் முதலமைச்சர் அவர்களால் மருத்துவமனை மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படவுள்ளது. இவ்வாறு நாமக்கல் மாவட்டத்தில் 2 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் உருவாக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களவை உறுப்பினர் அவர்கள் நாமக்கல் மாவட்ட மக்கள் சித்த மருத்துவத்தின் மீது அதீத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். கொல்லிமலை சித்தர்களால் ஆளப்பட்ட மிகப்பெரிய மையம். உலக அளவிலான சித்த மருத்துவத்திற்கான புகலிடம் என்றால் அது கொல்லிமலை ஆகும். கொல்லிமலையை ஆராய்ச்சி மையமாகக் கொண்டு, பழைய அரசு மருத்துவமனையில் 9 ஏக்கர் பரப்பளவில் சித்த மருத்துவமனையை தொடங்கி வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16 படுக்கை வசதி கொண்ட சித்த மருத்துவ சிகிச்சைப் பிரிவிற்கு, மேலும் புதியதாக 50 படுக்கை வசதியை செய்து கொடுத்துள்ளார்கள். அரசு விதிமுறைகளின்படி, 60 படுக்கைகளுடனான சித்த மருத்துவனை எங்கே செயல்படுகிறதோ, அங்கே சித்த மருத்துவக் கல்லூரி அமைவதற்கான வாய்ப்பு உள்ளது.

எனவே, ஒதுக்கீடு செய்யபட்ட 66-படுக்கைகள் கொண்ட இம்மருத்துவமனை யானது 2 ஆண்டுகளில் அரசு விதிமுறைகளின்படி, அரசு சித்த மருத்துவக் கல்லூரியாக தரம் உயர்த்தப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

கடந்தாண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தது போல இன்றைய தினம், ரூ.6 இலட்சம் செலவில், நாமக்கல் மாவட்டத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட வீடற்ற நபர்களை பராமரிப்பதற்கான அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம் (Emergency Care and Recovery Centres -ECRC) - தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

வீடற்ற மனநலம் பாதிக்கப்பட்ட பயனாளர்களுக்கான தமிழக அரசு மேற்கொண்டு வரும் தற்போதைய முயற்சிகளுக்கு சுகாதார மற்றும் குடும்பநலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, காவல்துறை, குழந்தைகள் நலத்துறை, தமிழ்நாடு மகளிர் வளர்ச்சிக்கழகம், சமூக நலத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற முக்கியத் துறைகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்துறைகளின் மூலம் பயனாளர்களின் மீட்பு, தங்குமிடம், சிகிச்சை மற்றும் மறுவாழ்வு ஆகிய முக்கிய சேவைகள் வழங்கப்படவுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் இம்மையம் 10 படுக்கைகளுடன் செயல்பட உள்ளது. இம்மையம் அரசின் உதவியுடன் அரசு சாரா அமைப்பான (NGO) Dream India Network மூலமாக செயல்படவுள்ளது. புற நோயாளிகளை அடையாளம் கண்டு, தொடக்க நிலை சிகிச்சை வழங்கி, பிறகு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி சிகிச்சை வழங்குவதற்கான கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்ட வட்டார மருத்துவமனை வளாகத்தில் புற நோயாளிகள் வார்டு உருவாக்கி தருவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இன்றைய தினம் வினைதீர்த்தபுரம், கபிலர் மலை மற்றும் இறையமங்கலத்தில் தலா ரூ.50 இலட்சம் வீதம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 3 பொது சுகாதார அலகுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தில் இயங்கும் ஆய்வகத்தின் மூலம் அப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் பயன்பெருவர்.

மேலும், கூடச்சேரியில் ரூ.33.00 இலட்சம் மதிப்பிலும், அணிமூர் பகுதியில் ரூ.45.00 இலட்சம் மதிப்பிலும் என ரூ.78.00 இலட்சம் மதிப்பில் 2 துணை சுகாதார நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிராம சுகாதார செவிலியர் இக்கட்டிடத்தில் தங்கி பொதுமக்களுக்கு தடுப்பூசி பணிகள், தாய்சேய் நல சேவைகள், முதல் உதவி சிகிச்சை, தொற்று நோய் மற்றும் தொற்றா நோய் சேவைகள் மற்றும் இதர முதல் நிலை மருத்துவ சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குவர்.

நாமக்கல் மாவட்டத்தை பொறுத்த வரை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, ரூ.364.74 கோடி மதிப்பீட்டில் பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல், சேந்தமங்கலம், குமாரபாளையம், பரமத்திவேலூர், இராசிபுரம், திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் ரூ.129.75 கோடி செலவில் 34 மருத்துவ கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சித்த மருத்துவமனை மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் பிற பணிகளில் பணியாற்ற உள்ள மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணி ஆணைகளையும், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நாமக்கல் மாநகராட்சி துணை மேயர் செ.பூபதி, பொது சுகாதாரம் (ம) நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம் (சென்னை), நாமக்கல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கே. சாந்தா அருள்மொழி, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் (சேலம் (ம) நாமக்கல்) மரு.கோ.புகழேந்தி, இணை இயக்குனர் (மருத்துவப்பணிகள்) மரு.அ.ராஜ்மோகன், மாவட்ட நல அலுவலர் மரு.க.பூங்கொடி, நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் க.சிவக்குமார், உதவி சித்த மருத்துவ அலுவலர் மரு.து. தமிழ்செல்வன், உட்பட உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சரின் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ்

# ரூ.7.23கோடி மதிப்பீட்டில் மரக்காணம் ஒன்றியத்தில் புதிய சாலைகள்அமைக்கும் பணிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார்.

திண்டிவனம் நவ. 4-

முதலமைச்சரின் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.7.23கோடி மதிப்பீட்டில் மரக்காணம் ஒன்றியத்தில் நடைபெறும் புதிய சாலைகள்அமைக்கும் பணிகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சிமற்றும் ஊராட்சி துறை சார்பில் மரக்காணம் ஒன்றியத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ்நகர் ஊராட்சி முருகன் கோவில் சாலை அமைப்பதற்கு ரூ.71.88 லட்ச மதிப்பீட்டிலும், இராவனாபுரம்இருளர் காலனி ரோடு அமைப்பதற்கு 66.42லட்சம் மதிப்பீட்டிலும், 28.40லட்சம்ரூபாய் மதிப்பீட்டில் ஆலங்குப்பம் ஏந்தூர்சாலை அமைப்பதற்கும், 42.23லட்ச ரூபாய் மதிப்பீட்டு ரங்கநாதபுரம் கேகே மேடு சாலை அமைப்பதற்கும் 38 . 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரணி பாலக்காடு சாலை அமைப்பதற்கும் 23.23 லட்சம் மதிப்பீட்டில் ஊரணி காட்டு கொல்லை சாலை அமைப்பதற்கும், 36.39 லட்சம் மதிப்பீட்டில் குரும்பறம் நடுக்குப்பம் சாலை அமைப்பதற்கும், ரூ.68.53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வடகரம் கிராம சுடுகாடு சாலை அமைப்பதற்கும், 49.86லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூனிமேடு கழுவெளி சாலை அமைப்பதற்கும், 109.80பத்து ரூபாய் மதிப்பீட்டில் அரசப்பூர் ராயநல்லூர் சாலை அமைப்பதற்கும், 61.58லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேப்பேரி குரூர் சாலை அமைப்பதற்கும் 61.58லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குரூர்வட நெற்குணம் சாலை உள்ளிட்ட 13ஊராட்சிகளில் புதிய சாலைகள் அமைப்பதற்கு பூமி பூஜை விழா மரக்காணம் ஒன்றியம் நகர் ஊராட்சியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார். துணை சேர்மன் பழனி முன்னிலையில் வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் அர்ஜுனன், ஊராட்சி மன்ற தலைவர் குமுதா ஜெயமூர்த்தி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு 13 ஊராட்சிகளில் 7 கோடியே 23 லட்சத்தி 89 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய சாலைகள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில்மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், ஒன்றிய கவுன்சிலர்கள் தேசம் பாலா, நாகஜோதி கணேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் திருமலை ஒன்றிய நிர்வாகிகள் செல்வம், பாபு, சுரேஷ்குமார், தேவதாஸ், வினோத், ஊராட்சி நிர்வாகிகள் சேதுபதி ராஜா, குமார், பூபாலன், சீனிவாசன், தகவல் தொழில் நுட்ப அணி சங்கர், எழிலரசன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட கீழ்வேளூர் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றிய தி.மு.க.. நிர்வாகிகள், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள், வாக்குச் சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (பி.டி.ஏ) கலந்துரையாடல் கூட்டம் கீழ்வேளூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளருமான கோவிந்தராசன் பேசினார். உடன் கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.பழனியப்பன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பரிபாலன், துணை ஒருங்கிணைப்பாளர் ரெக்ஸ், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் ஜவகர் பாட்சா, ஜீவானந்தம் மற்றும் பலர் உள்ளனர்.



கோவை மாநகராட்சி, மத்திய மண்டல மாமன்ற உறுப்பினர்கள் மாதாந்திர கூட்டம் மண்டல குழுத் தலைவர் மீனா லோகு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உதவி ஆணையாளர் நித்யா, செயற்பொறியாளர் கருப்புசாமி, உதவி செயற்பொறியாளர் குமரேசன், உதவி நகர அமைப்பு திட்டமிடுநர் ஹேமலதா, மண்டல சுகாதார அலுவலர் குணசேகரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.